# மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியத்தில் தாய் வழி சமுகத்தினர்

*இரா. பிரதீப் ராஜ்*
(8438986500) முனைவர் பட்ட ஆய்வாளர்
வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்

*முனைவர் அ. மரிய செபஸ்தியான்*
உதவிப் பேராசிரியர், வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்
https://doi.org/10.5281/zenodo.15526791

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைத் தமிழ் நூல்களில் பல அரசர் சிற்றரசர்களைப் பற்றிப் படிக்கிறோம். சிறப்புப் பெற்ற அவர்களெல்லாம் ஆண்கள். அவர்கள் தாய்முறை ஆண் வழியாகவே காணப்படுகிறது. தெய்வங்களில் ஏற்றமுடைய அனைத்தும் ஆண் வழியாகவே காண்ப்படுகின்றன. குறிஞ்சித் தெய்வமான சேயோன் (முருகன்), முல்லைத் தெய்வமான மாயோன் (திருமால்), நெய்தல் தெய்வமான வருணன், மருதத் தெய்வமான இந்திரன், ஆகிய அனைவரும் ஆண்பால் தெய்வங்களே. காவியங்களில் ஆண்களே தலைமை பெறுகிறார்கள். மணிமேகலை கதைத் தலைவியாக உருவாக்கப்பட்டிருப்பினும் அவளது ஆசிரியர் அறவணர் என்ற ஆண் என்பது சிந்தனைக்குரியது. சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகிய காவியங்களில் ஆண் தலைமை பெறுவதும், பல பெண்கள் அவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனது வெற்றிக்கு உதவுவதும் பெண்களுக்கு ஆண்கள் தாழ்ந்த இடத்தை அளித்த நிலையை தான் காவியங்கள் அளிக்கின்றன என்பது தெளிவாகிறது. புறநானூற்றில் பெரும்பாலான செய்யுட்கள், ஆண்களின் வெற்றிச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் போற்றுகின்றன. பெண் கவிகள் சிலர் பாடிய செய்யுட்கள் இத்தொகைநூலிற் காணப்பட்ட போதிலும், அவை ஆண்களுடைய வீரத்தையும், கொடையையும் பாராட்டுவனவாகவே உள்ளன. ஒன்றிரண்டு செய்யுட்கள் பெண்களுடைய துயரங்களைச் சித்தரித்த போதிலும் அவை ஆண்களைப் பிரிந்தபோது பெண்கள்படும் வேதனையாக இருக்கிறது. இவை எல்லாவற்றையும் சான்றாகக் காட்டி தமிழ் நாட்டில் எப்பொழுதும் தந்தை வழிச் சமுதாயமே இருந்து வந்திருக்கிறதென்றும், ஆண் ஆதிக்கச் சமுதாயமே எப்பொழுதும் நிலை கொண்டிருந்தது என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் தாய்வழிச் சமூகம், இலக்கிய காலத்திற்கு முந்தியது. சரித்திர காலத்திற்கு முந்தியது. மிகவும் பழமையானது என்பதைக் கவனத்தில் கொண்டால் இலக்கியச் சான்றுகளிலிருந்து மட்டும் மேற்கண்ட முடிவுக்கு வருவது தவறாக முடியும். அதனை மானுடவியல் ஆய்வுடன் ஒப்புமைப்படுத்தி சங்க இலக்கியத்தில் காணப்படும் தாய் வழி சமுக அமைப்பைப் பற்றி விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.ஒரு பெண்ணைக் காதல் மனைவியாக கைப்பிடித்து வாழ்க்கையைத் தொடங்கும் தலைவன் முன்னோரின் உழைப்பில் வாழ்ந்தால் தனக்கு அவமானம் எனக்கருதினான். காலச்சூழலில் ஆண் பெண் உறவுகள் தாய்வழிச் சமூகத்தில் இருந்த போது பெண்ணுக்கு ஆண் கட்டுப்பட்டு வாழ்ந்த நிலை மாறி ஆணைச் சார்ந்துபெண் வாழ்கின்ற சார்புச் சமூகமாக மாறிவிட்டது. ஆணின் உழைப்பின்வழி கிட்டும் பொருளில்தான் பெண் வாழ்க்கை நடத்திச் சென்ற நிலை சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. தலைவன் தன் உழைப்பில் தன் மனைவியும், வாழ வேண்டும் என்னும் அடிப்படையிலும், அறஞ்செய்தலின் அடிப்படையிலும் தலைவியை விட்டுப் பொருள்தேடச் சென்றான். இந்நிலை இன்றும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.*

**இலக்கணம் காட்டும் பெண் சமுகம்**

*தொல்காப்பியர் அகத்திணையைப் பிரித்திருக்கும் தன்மையைக் கொண்டு பெண் தான் முதலில் தலைமைப் பொறுப்பேற்று நடத்தினாள் என அறிய முடிகிறது.*

***புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங்காலை திணைக்குரிப் பொருளே***
***(தொல்.பொ.அகத்.14)***

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து திணைகளிலும் பெண்ணை மையப்படுத்தியே உரிப்பொருள் வைக்கப்பட்டுள்ளன. தலைவன் பிரிந்திருக்கும் போது தலைவி ஆற்றி இருப்பதே முல்லையின் உரிப்பொருளாகும். தலைவன் மீன்பிடித்தலுக்காகக் கடலில் செல்லும் போது அவன் வரவை நோக்கி இரங்கி இருக்கும் பெண்ணின் நிலை நெய்தலின் உரிப்பொருளாகும். பொருள் தேடச்சென்ற தலைவனை எண்ணி பிரிவை வருந்தும் பெண்ணின் நிலை பாலைக்குரிய உரிப்பொருளாகும். பரத்தையுடன் சென்ற தலைவன் மேல் ஊடல் கொள்ளும் தலைவியின் நிலை மருதத்தின் உரிப்பொருளாகும். கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்ணின் நிலை குறிஞ்சி என அகத்திணைகள் ஐந்தும் பெண்ணைமையப்படுத்தியே அமைக்கப் பெற்றுள்ளன.*

**அகத்திணை அமைப்பும் பெண்களின் மையப்பங்கு**

*தொல்காப்பியம் அகத்திணையை ஐந்து திணைகளாகப் பிரிக்கிறது. இதில்குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற இந்த ஐந்து திணைகளும் பெண்ணின் மனநிலைகளை மையமாக க் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.*

**தலைவியின் உருப்பொருள்கள் மற்றும் பெண்கள் வாழ்க்கைச் சித்திரம்**

*சங்க இலக்கியங்களில், தலைவியின் பிரிவால் ஏற்படும் உணர்வுகள், ஊடல், இரங்கல் போன்றவை பெருமளவு சித்தரிக்கப்படுகின்றன. இதில் பெண்களின் உணர்வுப் பரிமாணங்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன என்பதனை மேற்கண்ட அமைப்பின் வழி அறிய முடிகின்றது.*

**சங்க இலக்கியத்தில் தாய் வழி சமுகம்**

*சுதந்திரமான பாலுறவு நிலவிய அந்த காலத்தில் ஒருவரின் தந்தையைச் சரியாக அடையாளம் காண முடியாமல் வாழ்ந்தனர். இது பாலூட்டிகளின் இனப்பெருக்கத்தில் தாயை மட்டும் அடையாளம் காணக்கூடிய நிலையைக் காட்டுகிறது (2008: ப.9) என்று பக்தவத்சல பாரதி குறிப்பிட்டுள்ளார். ‘‘பழந்தமிழகத்தில் தாய்த் தாயமுறை இருந்தது. தாய்மாமன் மகளை மணக்கும் வழக்கம் தாய்த்தலைமைப் பண்பாட்டின் அம்சம் என்கிறார் எரன்ப்பெல்ஸ்’’ (2008: ப.13) என்று பக்தவத்சல பாரதி குறிப்பிட்டுள்ளார். இதனை சங்க இலக்கிய பதிற்றுப்பத்து பாடலின் வழி அறியமுடிகிறது. தாய் மாமனை மணக்கும் முறையானது சேர அரசர்களின் மணமுறையாக அமைகின்றது முதற்பத்து இறுதிப்பத்து தொகுக்கப்படாத நிலையில் இடையில் நின்ற எட்டுப்பத்து பாடல்களும் தாய்வழித் தாயமுறையை விளக்குகின்றது. சேரர்களின் பெண் வழியில் வந்த தாயை முறையை பல அறிஞர்கள் ஆய்வு செய்கின்றனர். இன்றும் பல சமுகங்களில் இவ்வகை காணப்படுகிறது.*

*பண்டைத் தமிழ் நூல்களில் பெண் தெய்வம் ஒன்றின் பெயர் காணப்படுகிறது. அவள் பலவாறு அழைக்கப்படுகிறாள். ‘‘முதியோள்’’ என்பது அவளது பெயர்களுள் ஒன்று. எல்லோரிலும் பெரியவள் என்று அதன் பொருள். அதே பொருளில் அவள் ‘‘பழையோள்’’ என்றும் அழைக்கப்பட்டுள்ளாள். இவள் யாரால் வணங்கப்பட்டாள் என்பதற்கு அவளுடையமற்றொருபெயர்பதிலளிக்கிறது. பரிபாடல் பதிகத்தில் அவள் ‘‘காடுகள்’’ என்று அழைக்கப்படுகிறாள். ‘‘காடு கிழாள்’’ என்ற மறு பெயரும் அவளுக்கு உண்டு. குறிஞ்சி நில மக்கள், வேட்டைத் தொழிலிலிருந்து*

*புராதனப் பயிர்த் தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் புன்புலப்பயிர் செய்யத் தொடங்கினார்கள். அக்காலத்தில் பெண்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆகவே காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் காடு கிழாளும் தோன்றினாள். புறநானூறு பாடலில் மூதில் குடி பற்றி பேசப்படுகிறது. அதில் மூதிலாளார்கள் (குடித் தலைவியர்), தம் குடும்பத்தில் உள்ளவர்களை போருக்கு அனுப்பிய, காட்சிகளும், கடமையின் வெளிப்பாடும், புறம் 248, 357 பாடல்கள் விவரிக்கின்றது. இதேப் போன்ற இன்னும் பிற நூல்களும் தாய்வழி சமுகத்தை பற்றி பேசுகின்றனர். தாய்வழிச்சமூக முறைனானது தென் தமிழகத்தில் இன்றும் 15க்கும் மேற்பட்ட சமுகங்களின் காணப்படுவது அதன் தொன்மையையும் தொடர்ச்சியும் பற்றி அறிய முடிகின்றது.*

*சங்க கால தமிழ் சமுதாயம் மற்றும் அதன் அமைப்புகள் மானிடவியல் ஆய்வின் முக்கிய பகுதிகளாகும். இதில், தாய்வழிச் சமூகம் என்பது ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. தாய்வழிச் சமூகம் என்பது குடும்பத்தின் அடையாளம், சொத்து உரிமை, வளர்ப்பு மற்றும் மரபு பரம்பரைகள் தாயின் வழி நிகழும் அமைப்பைக் குறிக்கிறது. இது ஒரு சமூகத்தினுள் தாயின் பங்கு மற்றும் அவரது சமூக நிலையை, சிறப்பாக வெளிப்படுத்துகிறது. சங்ககால இலக்கியங்களில், குறிப்பாக அகநானூறு, புறநானூறு மற்றும் சிறுபாணாற்றுப்படை போன்றவற்றில் இதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. மானிடவியல் ஆய்வுகளுடன் இந்த இலக்கியங்களின் சான்றுகளை ஒப்பிட்டு பார்க்கும் போது, சங்ககால சமூகத்தில் பன்முகமான குடும்ப அமைப்புகள், பெண்களின் முக்கிய பங்கு மற்றும் அவர்களின் உரிமைகள் பற்றிய அறிவு தெளிவாக விளங்குகிறது அவை பகுப்பு விளக்கம் குடும்ப அமைப்பு தாய் வழி குடும்பம் (மாத்ரியார்கல்), ஒருங்கிணைந்த குடும்ப அமைப்பு.*

*தாயார் வழி பொறுப்பு குடும்ப பொறுப்புகள் பெரும்பாலும் தாயாரின் மீது; உறவுகள் தாயின் வழியாகப் பரம்பரையாக அமைவது. பிள்ளைகளின் அடையாளம் பிள்ளைகள் தாயின் பெயர் அல்லது குல அடையாளத்தைத் தொடர்கிறார்கள்.*

*சடங்கியியல் முறை திருமணச் சடங்குகள், பிறப்பு, மரணம் போன்றவை தாயின் வழிப்படி நடக்கின்றன.*

*சொத்து உரிமை பெண்களுக்கு சொத்துரிமை இருந்தஹீ; சொத்து தாயின் வழியாக மரபாக செல்கிறது.*

*குடும்ப தலைவி குடும்பத்தின் வழிகாட்டியும், முக்கிய முடிவுகளை எடுக்கும் தலைவராகப் பெண்கள் இருந்தனர்.*

## பெண்களின் சமூக நிலை அல்லது குடும்ப அமைப்பும்

*சங்க இலக்கியத்தில், சங்ககாலத்தில் பெண்கள் குடும்பம் மற்றும் சமுதாயத்தில் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் மட்டுமே குடும்பத்தின் உள்நாட்டு நிலைகளையும், சமுதாயச் செயல்பாடுகளையும் நிர்வகித்தனர். அகநானூறு மற்றும் புறநானூறு போன்ற நூல்களில் பெண்களின் அறிவு மற்றும் சமூக இடம் உயர்ந்தது இதனை பின்வரும் சங்க இலக்கிய பாடல் வழி அறியலாம்*

***வள்தான் குடி வளத்தள்,***
***நல் அறிவள், நலனுடையாள். அகம் - (86)***

*இதனை மாணிடவியல் ஆய்வுகள் அடிப்படையில், ஒவ்வொரு சமூகத்திலும் பெண்களின் நிலை மற்றும் பங்கு சமூக அமைப்பின் முக்கிய அம்சமாக அமைகிறது. என்கிறார் பக்த வச்சலபாரதி அவர்கள் மேலும் ஹக்கெட்* (Hacket) *மற்றும் பிற சமூக வல்லுநர்கள், பல சமூகங்களில் பெண்கள் தான் குடும்ப மரபுகளை கையாளுவதாகக் கூறியுள்ளனர். சமுதாய அமைப்புகளின் அடிப்படையில், பெண்களின் செல்வாக்கு அதிகம் இருந்தது, அவர்கள் குடும்பத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றினர்.*

**மாமனார் வழிப் பொறுப்புகள் (தாயின் சகோதரர்)**

*சங்க இலக்கியத்தில்: சங்க இலக்கியங்களில், தாயின் சகோதரர்கள் (மாமனார்) குழந்தைகளின் வளர்ப்பில் முக்கிய பங்கு வகித்தனர். பெரும்பாணாற்றுப்படை போன்ற ஆக்கங்களில் இது விளக்கப்பட்டுள்ளது. இது தாய்வழி மரபின் கீழ் குடும்பத்தின் உரிமை மற்றும் பங்குகளை வெளிப்படுத்துகிறது.*

***" மாமனும் தாயோடு மகனை வளர்த்தான்***
***(பெரும்பாணாற்றுப்படை)***

*மாணிடவியல் ஆய்வுகள் மற்றும் சமூக அமைப்புகள், குறிப்பாக குழந்தைகளின் வளர்ப்பில் ஆண்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு பங்காற்றுகிறார்கள்என்பதை ஆராய்கின்றன. சின்ஹா (*Singh*) போன்ற ஆய்வாளர்கள், சமூகங்களில் குழந்தைகள் தாயின் சகோதரரிடமே அதிக நேரம் செலவிடுவதாகக் கூறியுள்ளனர். இது தாய்வழிச் சமூக அமைப்பின் அடிப்படையிலும், குடும்பத்தின் பரம்பரையை தொடர்ந்து பாதுகாக்கும் முயற்சிகளாக அமைந்துள்ளது.*

*பிள்ளைகளின் அடையாளம் தாயின் வழி சங்க இலக்கியத்திலும், சங்க இலக்கியத்தில்: சங்க இலக்கியங்களில், குழந்தைகளின் அடையாளம் பொதுவாக தாயின் வழி அமைக்கப்பட்டது. அகநானூறு மற்றும் புறநானூறு போன்ற நூல்களில், அவள் மகன் அல்லது அவள் குலம் என்று குறிப்பது, தாயின் குலம் அல்லது பரம்பரையைக் குறிக்கின்றது.*

***அவள் பெயரால் அழைக்கப்படும் மகன்***
***(அகநானூறு - பாடல் 113)***

*சங்க இலக்கியங்களில், தாயின் சகோதரர்கள் (மாமனார்) குழந்தைகளின் வளர்ப்பில் முக்கிய பங்கு வகித்தனர். பெரும்பாணாற்றுப்படை போன்ற ஆக்கங்களில் இது விளக்கப்பட்டுள்ளது. இது தாய்வழி மரபின் கீழ் குடும்பத்தின் உரிமை மற்றும் பங்குகளை வெளிப்படுத்துகிறது. மாணிடவியல் ஆய்வுகள் மற்றும் சமூக அமைப்புகள், குறிப்பாக குழந்தைகளின் வளர்ப்பில் ஆண்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு பங்காற்றுகிறார்கள் என்பதை ஆராய்கின்றன. சின்ஹா (*Singh*) போன்ற ஆய்வாளர்கள், சில சமூகங்களில் குழந்தைகள் தாயின் சகோதரரிடமே அதிக நேரம் செலவிடுவதாகக் கூறியுள்ளனர். இது தாய்வழிச் சமூக அமைப்பின் அடிப்படையிலும், குடும்பத்தின் பரம்பரையை தொடர்ந்து பாதுகாக்கும் முயற்சிகளாக அமைந்துள்ளது.*

**திருமண மரபுகள் மற்றும் பெண் வீட்டில் குடியேறும் முறை**

*சங்ககாலத் தமிழ் சமுதாயத்தில், மணமகன் மனைவியின் வீட்டில் குடியேறுவது என்பது ஒரு வழக்கமாக இருந்தது. நற்றிணை போன்ற நூல்களில் இதன் சான்றுகள் காணப்படுகின்றன.*

***விரும்பிய பெண்ணின் வீட்டில் வாழ்ந்தான்***
***- நற்றிணை (பாடல் 234)***

*மாணிடவியல் ஆய்வுகள், குறிப்பாக தாய்வழி மற்றும் பெண் வழி குடும்ப அமைப்புகளின் சுட்டிகளை ஆராய்கின்றன. ஹன்சன் (*Hansen*) போன்ற ஆய்வாளர்கள், திருமணங்கள் எவ்வாறு பெண் குடும்பத்தின் பங்கு மற்றும் சமூக நிலையை வலியுறுத்துவதற்கு வழிகாட்டுவதாகக் கூறியுள்ளனர்.. மாணிடவியல் ஆய்வுகள், சங்ககால சமுதாயங்களில் பெண் வழி குடும்ப அமைப்புகளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன. இது, பெண்கள் அவர்களின் குடும்பத் தலையில் வழிகாட்டியாக இருக்கின்றனர் என்ற நம்பிக்கையை காட்டுகிறது சங்க கால சமுதாயங்களில் பெண் வழி குடும்ப அமைப்புகளின் முக்கியத்துவத்தை உறுதிப் படுத்துகின்றன. இது, பெண்கள் அவர்களின் குடும்பத் தலைமையில் வழிகாட்டியாக இருக்கின்றனர் என்ற நம்பிக்கையை காட்டுகிறது.*

**பெண்களின் சொத்து உரிமை**

*சங்ககால சமுதாயங்களில், பெண்கள் சொத்து உரிமையையும், தனக்குரிய நிலமும் கொண்டவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். புறநானூறு போன்ற நூல்களில் இதன் சான்றுகள் காணப்படுகின்றன.*

***வள மிக்கவள், தனக்குரிய நிலம் வழிபட்டாள்***
***(புறநானூறு பாடல் 191)***

*மாணிடவியல் ஆய்வுகள், உலகெங்கிலும் பல தாய்வழி சமுதாயங்களில் பெண்களுக்கு சொத்துரிமைகள் மற்றும் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. பீல்* (Beal) *மற்றும் சீக்ஸ்* (Seeks) *போன்ற ஆய்வாளர்கள், அந்த சமுதாயங்களில் பெண்களின் சொத்துரிமைகள் மகத்துவம் வாய்ந்ததாக இருந்தன என்று தெரிவிக்கின்றனர். இங்கு, தாய்வழிச் சமுதாயங்களின் எளிமையான வாழ்வாதாரம் மற்றும் பெண்கள் சொத்துரிமை பற்றிய அறிமுகம், மானிடவியல் ஆய்வுகளின் முக்கிய அம்சங்களுடன் ஒப்பிடப்படுகிறது*

## பெண் தலைமையுடைய குடும்பங்கள்

*சங்ககால சமுதாயங்களில், சில சமுதாயங்களில் பெண்கள் குடும்ப தலைவராக இருந்தனர். இது, குடும்ப மரபின் அடையாளம் பெண்களால் மட்டுமே பரிமாறப்படுவதாகக் குறிக்கின்றது*

***அவள் குலம் பெருமை பெற்றது***
***- அகநானூறு (பாடல் 123)***

*மாணிடவியல் ஆய்வுகள், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் உலகெங்கும் காணப்படுகின்றன என்று காட்டுகின்றன. அப்படியென்றால், சில சமுதாயங்களில் பெண் தான் குடும்பத்திற்கு மேலாண்மை வழங்கும் என்பதைக் காணலாம். இந்தப் பார்வை, பெண்களின் தலைமை வகிக்கும் சமூக அமைப்புகளுக்கு இணையானதாக இருக்கிறது.*

## உணவு சேகரித்தலில் தாய் வழி சமுகத்தினர்

*மனிதன் வேட்டையாடி உணவு தேடிய காலத்தில் ஆண்களே வேட்டைத் தொழில் செய்தனர். அவர்களே சமுதாயத்தில் ஆதிக்கம் வகித்தனர். அதனால் பெண்கள் குகைகளிலும், குடிசைகளிலும் தங்கினர். அவர்கள் செடி, கொடிகளைக் கண்டனர். அவற்றின் இனப்பெருக்கத்தை அனுபவத்தில் கண்டனர். இயற்கையைப் பின்பற்றித் தாங்களும் கொட்டைகளைப் பூமியில் விதைத்தனர். விதைகளை நிலத்தில் ஊன்றினர். கிழங்குகளை நிலத்தை அகழ்ந்து புதைத்து மூடினர். அவை வளர்ச்சியுற்றுப் பலனளித்தன. இவ்வாறு பண்டைப் பயிர்த் தொழில் தோன்றிற்று. பயிர்த் தொழிலிலிருந்து, வேட்டைத் தொழிலிருந்து கிடைப்பதைவிட அதிகமாக உணவு கிடைத்தது. முதலில் பெண்களே பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். அவர்களே பயிர்த் தொழிலை கண்டுபிடித்தனர். பயிர்த் தொழில் செய்ய ஆள்பலம் வேண்டும். அதற்குரிய மக்களை ஈன்றதும், அவர்களுக்குப் பயிர்த்தொழிலைக் கற்றுக் கொடுத்ததும் பெண்களே. ஆண்கள் வேட்டைக்காக நெடுந்தூரம் சுற்றி அலைவார்கள். சில நாட்களுக்கு ஒருமுறையே குடில்களுக்குத் திரும்புவார்கள். ஆகவே பயிர்த் தொழிலின் தொடக்கக் காலத்தில் ஆண்களுக்கு அதில் அதிகப்பங்கு இருந்ததில்லை. குடும்ப வளர்ப்பிலும், அதிகப்பங்கு இருந்ததில்லை. பெண்களே புராதனப் பண்பாட்டை உருவாக்குவதில் முக்கியப் பங்கு பெற்றனர். வேட்டை முக்கியத் தொழிலாக இருந்தது மாறி பயிர்த் தொழில் முக்கியத் தொழிலாயிற்று. பயிர்த் தொழிலில் பங்கு பெற்ற பெண்களும் ஆண்களை விட உயர்வு பெற்றனர். தொல்குடிகளைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளும் உண்மை இது.*

## சமயங்கள் போற்றும் தாய்வழி சமுதாயம்

*பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றி வளரும் சரித்திர முற்காலத்தில் பெண் தெய்வங்கள் தோன்றின. பயிர்த் தொழில் செழிப்பைக் கொடுத்தது. ஆகவே செழிப்பைக் குறிக்கும் தெய்வங்கள் பல நாடுகளிலும், பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. சீதேவி, கிரேக்க தெய்வங்களான சைபீல்டெடோனா, டெல்பி முதலியவை பெண் தெய்வங்கள் ஆகும். செழிப்பை வேண்டி நடத்தப்படும் விரதங்களிலும், விழாக்களிலும், இன்றும் ஆண்களுக்குப் பங்கில்லை. உதாரணமாக பாவை நோன்பை*

நோக்குவோம். பாவைகள் பலவகைப்படும்; அல்லிப்பாவை, கொல்லிப்பாவை, தெற்றிப் பாவை, மணற்பாவை, வண்டற்பாவை முதலியன. நாடுவளம் கொழிக்க இவற்றைப் பெண்கள் பூசை செய்வார்கள். மழைவளம் சுரக்கவும், ஆற்று நீர் நிலத்தை விதையேற்கும் பருவமாக்கவும், முளை வளரவும், பயிர்வளம் பல்கவும் பாவையை வாழ்த்துகிறார்கள். "திருப்பாவை" இப்பாவை நோன்பை வருணிக்கிறது. இந்நோன்பிலே ஆண்களுக்கு இடமில்லை. பாவையை வணங்கி விழா கோண்டாடினால் வளம் கரக்கும். பெண்மக்களுக்கு இன்பமும் சுரக்கும் என்று திருப்பாவை கூறுகிறது. பாவைக்கு நோன்பு செய்தால் கண்ணன் பரப்பு மாக பறை தருவான் அருள் தருவான் என்றும் "திருப்பாவை" கூறுகிறது. இதிலே கூர்ந்து நோக்க வேண்டியது. கண்ணனுக்குப் பூசை இல்லை, விழாவும் இல்லை. பாவைக்குத்தான் பூசை, பாவை மணலாலும் வண்டலாலும் கிழங்கினாலும் செய்யப்பட்டது. பாவை நிலத்திற்கு அடையாளம், நிலமோ பெண்; பெண்ணே செழிப்பைத் தருபவள். அவளை வணங்கினால் வளம் அருளுவாள். இங்கே கண்ணன் பார்த்து நிற்பவனே அவனுக்கு முக்கியத்துவம் இல்லை. ஆண்டாளுடைய காலத்துக்கு முன் தமிழ் நாட்டுப் பெண்கள் பாவை நோன்பு கொண்டாடியிருக்க வேண்டும். அப்பொழுது கண்ணனுக்கு அதில் சற்றும் இடமிருந்திராது என்பது நிச்சயம். பாவைநோன்பு, பாவைக்கு மட்டுமே, அதில் பங்கு பெறுபவர் பெண்கள் மட்டுமே, ஆண்டாள் காலத்தில், மிகப் புராதன காலத்தில் நடந்த விழா வொன்றின் மிச்சங்கள் பாவை நோன்பில் எஞ்சிக் காணப்பட்டன.

## தாய் தெய்வ வழிபாடு

தாய்தெய்வ வழிபாடு தாய்த்தலைமையின் எச்சமாகும். ஆதியில் தாய்வழித் தலைமை நிலவியதால் தாய் தெய்வமே பழந்தெய்வமாக இருத்தல் வேண்டும். "குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனைச் சிவன் மகனாகக் குறிப்பிடாமல் சங்க இலக்கியம் "மலை மகள் மகன்" என்றும் "கொற்றவைச் சிறுவன்" என்றும், "பழையோர் குழவி என்றும் குறிப்பிடும் இக்குறிப்பு தாய்வழிமுறையின் எச்சமாகும்" (1992: ப.66) என்று க.ப. அறவாணன் சுட்டிக் காட்டுகின்றார்.

தாய்வழிச் சமுதாயமே மிகப் பழமையானதால் முதலில் பெண் தெய்வ மதமே தோன்றியது. தமிழ்நாட்டு மக்களால் தொன்று தொட்டு வணங்கி வரப்பெற்ற மிகப் பழமையான பெண் தெய்வங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. குகை தெய்வமாகிய சூலிக்கு உரிய கடன்களை செய்ததாகப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

> ***விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்***
> ***கடனும் பூணாம் (: 218: 1-2)***

சூலி, சூர்மகள், சூரரமகளிர், வரையர மகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை, அணங்கு இவைப் பெண் தெய்வங்களாகத் திணை நிலங்களில் சூலி, சூர்மகள், சூரரமகளிர், வரையர மகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை, அணங்கு இவைப் பெண் தெய்வங்களாகத் திணை நிலங்களில் வாழக்கூடியவை. "இத்தெய்வம் மலை, மலைச்சாரல், நகரின் நிலைவாயில், வானம்முதலிய இடங்களை உறைவிடமாகக் கொண்டது. உருத்தாத நோக்குடையது. வனப்பு மிக்க தோற்றத்தையும் கொண்டது. நள்ளிரவில் உருவெடுத்து உலவி வருவது. தான் வேண்டிய உருவினை எடுத்துக் கொண்டு வரும்சு (1989: ப.22) என்று வேங்கடாசலம் குறிப்பிடுகின்றார். ஆதி தாய் தெய்வமாகக் கருதப்பெறும் கொற்றவையோடு சிவனும், திருமாலும் இணைக்கப்பெற்றனர் என்பதை பின்வரும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றது.

> ***"பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த***
> ***விற்றொழில் வேடர் குலனே குலனும்***
> ***ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த***
> ***வேய்வி லெயினர் குலனே குலனும்"***
>
> ***(சிலம்பு 12 : 4, 5, 6)***

*மறவர் ஆனிரைக் கவர்தலைக் கொற்றவை விரும்புவாள். ஆயின் பகை நாட்டில் வரும் கேட்டினைக் கரிக்குருவி தன் கடுங்குரலால் இசைத்துக்காட்டும் எனவும் அவ்வாறு ஆநிரைக் கவரச் செல்லும் மறவர் முன்னர்க் கொடியெடுத்துக் கொற்றவை வில்லின் முனைப்பிலே அமர்ந்து செல்லும் எனவும் கூறப்பட்டுள்ளது. இது தாய் தெய்வத்தின் தலைமையைக் காட்டுகின்றன. வெற்றித் தருவதும் வெற்றியைத் தரும் போருக்கு ஒப்புதல் வழங்குவதும் தாய்தெய்வமாகும் எனக் கூறப்படுவது பண்டைக் காலத்துத் தாய்வழித் தலைமையின் எச்சமாகும். தமிழகத்தில், மற்றைய கோயில்களை விட அம்மன் கோயில்கள் மிகுதியாக உள்ளன. இதற்குரிய காரணம், திராவிடர் தாய்மைக்கு முதன்மைக் கொடுத்தமையேயாம். பண்டைக் காலத்தில், திராவிடக் குடியினர் தாய்வழித் தலைமுறையைப் பின்பற்றி வந்தனர். ஆரியர் தம் வரவும் உறவும் நேர்ந்த பின்பே, தந்தை வழித் தலைமுறைக்கு மாறினர். தாய்வழித் தலைமுறையை அன்னோர் போற்றிய காலத்தில் தாய் வணக்கத்தையே அன்னோர் மேற்கொண்டிருந்தனர். அதனாலேயே ஊர்தோறும் அம்மன் கோயில்கள் எழுப்பினர்சு என்று தொ.பரமசிவன் கூறகிறார்.*

## தமிழ்ச் சமூகங்களில் எஞ்சி நிலைத்த தாய்வழி சமூக அடையாளங்கள்

"*இந்தியாவின் மக்கள்*" (People of India) *என்னும் மாபெரும் ஆய்வுத் திட்டத்தை 1985இல் மேற்கொண்ட இந்திய மானிடவியல் மதிப் பாய்வகம்* (Anthropological Survey of India) *தமிழத்தின் 364 சமூகங் களையும் பற்றிய விவரங்களை இத்திட்டத்தின் 40-ஆவது தொகுதியாக வெளியிட்டது. இத்தொகுதி 3 பகுதிகளைக் கொண்டது. இந்நூல் வரிசைகளுக்கு முன்னுரை எழுதிய மதிப்பாய்வகத்தின் அப்போதைய தலைமை இயக்குநர் கே.எஸ்.சிங் தென்னிந்தியச் சமூகங்களில் மிகவும் பரவலாகக் காணப்படும் தாய்வழி எச்சக் கூறுகளைக்* (survivals) *குறிப்பிடுகிறார்.*

*பெண்கள் தங்கள் தலைப்பிரசவத்தைப் பிறந்தகத்தில் (தாய் வீட்டில்) வைத்துக் கொள்ள வேண்டும் என்ற மரபு தாய்வழிச் சமூகத்தின் எச்சக்கூறு ஆகும்.*

*திருமணமான தம்பதியினருக்குச் செய்யப்படும் "சாந்தி முகூர்த்தம்" மணப்பெண்ணின் தாயகத்தில் நிகழவேண்டும். என்ற மரபும் தாய் வழி சமூக அமைப்பின் எச்சமாகும்.*

*தென்னிந்திய சமூகங்களில் பிறந்த குழந்தைகளுக்கு மொட்டையடித்தலும் பெயர் வைப்பதும், தாய்வழிச் சமூகத்தின் எச்சக்கூறு ஆகும்.*

*தாய்வழி சமூகங்களில் பெண்ணின் திருமணம் அவளுடைய தாயகத்தில் நடை பெற்றது. அதன் எச்சமாகவே, ஆண்வழிச் சமூகமாக மாறிய பின்னர் இன்று வரை திருமணத்தின் தொடக்க நிகழ்ச்சியான நிச்சயதார்த்தும் பெண்ணின் தாயகத்தில் நிகழ்கிறது.*

*மானிடவியல் ஆய்வில் தாய்வழி சமுகத்தினர்.*

*புராதனத் தமிழ்ச் சமூகம் தாய்வழிச் சமூகம் என்பதற்குச் சங்க இலக்கியங்களில் நிறையவே சான்றுகள் உள்ளன. என்பதை மேற்கூறிய ஆய்வின் வழி காணமுடிகின்றது. சங்ககாலத்தில் தமிழ்ச் சமூகம் பெருவாரியாக தாய்மையச் சமூகமாக இருந்துள்ளது என்பதையும் காண்கிறோம். சங்க காலத்திற்குப் பின்னர் தாய்வழி சமூகங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டன என்று கருத முடியாது என்பதற்கும் சான்றுகள் இருக்கின்றனர். தமிழ் மரபு தொன்மையானது மட்டுமல்ல; தொடர்ச்சியான மரபாகும் அந்த வகையில் ஆதியில் தாய்வழி மரபு இன்றும் தமிழகத்தில் தென் மாவட்டங்களில் காணப்படுவது இதனை மெய்பிக்கும் சான்றுகளாகும். தமிழகத்தில் தென்மாவட்டங்களே தமிழ் பண்பாட்டின் ஆதி கூறுகளாக அமைகின்ளது. என்கிறார் பக்தவச்சல பாரதி அவர்கள் மேலும் அவர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இன்றும் தாய்வழி சமுக அமைப்பினரை*

பின்பற்றி வருபவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர்.என்று கூறியுள்ளார்.அந்த வகையில் தாய் வழி சமுகங்களாக அவர் வகைப்படுத்துவது..

1. கோட்டை பிள்ளைமார்
2. செவலைப் பிள்ளைமார்
3. இல்லத்துப் பிள்ளைமார்
4. நாங்குடி வேளாளர்
5. நாஞ்சில் நாட்டு வேளாளர்
6. அரும்புக்கட்டி வேளாளர்
7. கோட்டை மறவர்
8. காரண மறவர்
9. ஆம்பநேரி மறவர்
10. அஞ்சுக்கொத்து மறவர்
11. கிருத்துவ மறவர்
12. மரைக்காயர்
13. கயலர்
14. அய்யனவர்
15. சக்கரவர்

போன்றவர்கள் தாய்வழி மரபுவழியில் இன்றளவும் வாழ்கின்றனர் என்று அவர், தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் பழங்குடியில் குறிப்பிடப்பட்டுள்ள முதுவர்கள் இன்று கண்ணியாகுமரி மாவட்டத்தில் பழைய கோட்டாறு செட்டியார்கள் தாய் வழி மரபை பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.

## முடிவுரை

இலக்கிய மானிடவியலானது வரலாறு சார்ந்தும் சமுகம் சார்ந்த ஆய்வுக் களங்களைக் கொண்டது. இலக்கியப் பனுவல்கள், குறிப்பாகச் செவ்வியல் பனுவல்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு வரலாற்றுக் கட்டங்களைக் கடந்து வந்துள்ளன.அதனுடன் பல சமுகங்களை படம் பிடித்துக்காட்டுகிறது. ஆதலின் தமிழ்ச் சமுகத்தின் படைப்பியக்கத்தின் வரலாறும், சமுகமும் கருத்தியல் வளர்ச்சி, அறிவாராய்ச்சி முறை, சமுகப் பண்பாட்டு வரலாறு போன்றவற்றை இப்பனுவல்கள் மூலம் ஆராய இயலும் என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது. பண்டைய இலக்கிய பனுவல்களில் வரலாற்றின் தடங்கள் மூலம் தாய் வழி சமுக மக்களின் அமைப்பு விரிவாக விவரிக்கப்படுகின்றது., அதனை முதன்மையாக கொண்டும் மானிடவியலில் உருவாக்கப் பெற்றுள்ள சமுக அமைப்பு அணுகு முறைகள் துணையாக கொண்டும் தாய்வழி சமு அமைப்பு முறையை ஆராய்ந்து அவை இக்கால கட்டத்தில் கடந்து வந்த பாதைகளையும் இக்கட்டுரை விவரிக்கிறது. இதற்குப் பெரிதும் பயன்படும். வரலாற்றுச் சான்றுகளின் எண்ணற்ற தொல்குடிகளின் தாய்வழிசமுக அமைப்பை மானிடவியலானது அவர்களின் வழக்காறுகள் (தொன்மங்கள், பழக்கவழக்கம், இடப்பெயர்ச்சி, வழிபாட்டு முறைகள், பாடல்கள், , இன்ன பிற) வாயிலாக மீட்டுருவாக்குகிறது. ஆகவே இத்தகைய அணுகுமுறைகள் இலக்கியங்களிலிருந்து வரலாற்றை மானிடவியல் நோக்கில் மீட்டெடுக்க உதவ முடியும் என்பதை இந்த ஆய்வுக்கட்டுரை விரிவாக விளக்குகிறது.

## துணை நின்ற நூல்கள்


1. சுப்ரமணியன். ந. சங்க கால வாழ்வியல் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை 1986
2. சுப்புரெட்டியார். நு. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை சந்தியா பதிப்பகம் சென்னை 2011
3. செல்வம். வே.தி. தமிழக வரலாறும் பண்பாடும் மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2009
4. சோமலே தமிழ் நாட்டு மக்களின் மரபும், பண்பாடும் வெற்றி செல்வி வெளியீட்டகம் தஞ்சாவூர், 1973
5. தனஞ்செயன், ஆ சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலும் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் சென்னை 1986
6. நமசிவாயம், சே., தமிழர் உணவு உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 1981
7. பரமசிவானந்தம், அ.மு சமுதாயமும் பண்பாடும் (கட்டுரையாளர்) காலச்சுவடு ஆய்விதழ் நாகர் கோவில் 2001

8. பக்தவச்சல பாரதி தமிழர் மானிடவியல் அடையாளம் பதிப்பகம் திருச்சி 2002
9. பக்தவச்சல பாரதி பண்பாட்டு மானிடவியல் அடையாளம் பதிப்பகம் திருச்சி 2002
10. பக்தவச்சல பாரதி பண்டைத் தமிழப் பண்பாடு அடையாளம் பதிப்பகம் திருச்சி 2020
11. பரமசிவன் தொ. பண்பாட்டு அசைவுகள் காலச்சுவடு பதிப்பகம் நாகர் கோவில் 2001
12. தில்லைநாதன், சி. இலக்கியமும் சமுதாயமும் தமிழ் புத்தகாலயம், சென்னை 1987